# இஸ்லாமியர்கள் செய்யும் ஸியாரத் சார்ந்த வழிமுறைகள் கப்ருவணக்கமாகுமா ?

குறிப்பு :இந்த துண்டுப்பிரசுரம் மேலுள்ள தலைப்பின் கீழ் வெளியிடப்பட்ட கட்டுரையின் தொடர்ச்சியில் அங்கே குறிப்பிடப்படாத சில குற்றச்சாட்டுக்களுக்கான பதில்களை வழங்குவதற்காக இத்தால் பகுதி 2 ஆக வெளியிடப்படுகின்றது.இந்த கட்டுரையை வாசிக்க முன் பகுதி 1இணை வாசித்து விட்டு பகுதி 2இணை வாசித்தால் இந்த தலைப்பில் வஹ்ஹாபிகளால் விமர்சிக்கப்படுகின்ற மறுப்புக்களுக்கான பதில்களை திருப்திகரமாக பெற்றுக்கொள்ள முடியும் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்பிகிறேன்.

சகோதரர்கள் இதை வாசிப்பதில் சலிப்படையாமல் இஸ்லாத்தின் அடிப்படைகளை அதன் ஆதாரத்துடன் அறிந்து வைக்க ஆவல் கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுகொள்வதோடு அனைவருக்கும் மார்க்கத்தை சரியான முறையில் அறிந்தும் அதை சரியான முறையில் விளங்கி நடக்கவும் வல்லவன் அல்லாஹ்விடம் பிரார்த்தித்தவனாக இரண்டாம் பகுதியில் நுழைகின்றேன் அல்ஹம்துல்லில்லாஹ் .

**1.சமாதியில் அடங்கப்பட்டிருக்கும் அவ்லியாக்களை ஏன் கௌரவிக்க வேண்டும் ?என்பதன் விளக்கத்தை பார்ப்போம்.**

“மனிதனுக்கு மனிதன் நன்றி செலுத்தாதவன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தாதவனை போன்றாவான் “என்ற நபிமொழிக்கு ஏற்ப இலங்கை திரு நாட்டிலே எம்மை முஸ்லிம்களாக வாழ வைப்பதற்கும் ,பெரும்பாலான கிராமங்கள் முஸ்லிம் கிராமங்களாக காணப்படுவதற்கும் ,இலங்கையின் நாளா பாகங்களிலும் பள்ளிவாசல்கள் அமைக்கப்படுவதற்கும் முஸ்லிம்களின் வரலாறு பேசப்படுவதற்கும் காரணமாக இருந்தவர்கள் அந்த அந்த பள்ளிவாசல்களின் அருகாமையில் அடங்கப்பட்டிருக்கும் அவ்லியாக்களே தவிர வேறு யாருமல்லர் .இவர்களுக்கு நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ள போது அவர்களை குறைந்த பட்சம் வருடாந்தமாவது நினைவு படுத்தாமல் இருக்கும் போது எப்படி நாம் அந்த அவ்லியாக்களுக்கு நன்றி செலுத்தியவர்களாக மாற முடியும் ?அது மட்டுமல்லாமல் பல பள்ளிவாசல்களின் அருகே அடக்கம் செய்யப்பட்டுள்ள அந்த இறை நேசர்களின் கப்ருகளை வேறாக்கி யாருமே பார்த்திடாதபடி பூட்டு போட்டு மூடிவைப்பதால் எப்படி அவர்களுக்கு நன்றி செலுத்தியவர்களாக மாற முடியும் ? பெற்றொருக்கு அவர்களின் கப்ரை சியாரத் செய்து நன்மைகளை சேர்த்து வைப்பதன் மூலம் நன்றியுபகாரம் செய்தவராக மாற முடியும் எனில் , இஸ்லாத்தை உங்கள் வீட்டுக்கும் ஊருக்கும் கொண்டுவந்து கொடுத்த அவ்லியாக்களுக்கு நன்றியுபகாரம் செய்யும் பொருட்டு குறைந்த பட்சம் அவர்களுக்காக குரானின் சில பகுதிகளையாவது ஓதி ஹதியா செய்வதற்காக அந்த ஜியாரங்களை திறந்து விடாமல் இருப்பது ஏன் ?அந்த ஜியரங்களை மறைத்து வைப்பதன் காரணமாக எப்படி குர் ஆன் ஓதி ஹதியா செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட மக்களின் நன்றியுபகாரத்தை நிறைவேற்ற முடியும்?தானும் நன்றியுபகாரம் செய்யாமல் பிறரையும் நன்றியுபகாரம் செய்யவிடாமல் தடுப்பதால் எப்படி அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தியவர்களாக மாற முடியும்? என்பதை அனைவரும் கருத்தில் எடுப்பது காலத்தின் தேவையாகும் .

**2.சமாதிகள் உள்ள பள்ளிகளில் தொழலாமா ?கப்ரின் மீது தொழுவதும் அதன் அருகாமையில் தொழுவது இரண்டும் ஒன்றாகுமா ?**

நபியவர்கள் யூதர்களையும் நசாராக்களையும் சபித்தார்கள் ஏனெனில் அவர்கள் தங்கள் மரணித்தவர்கள் கப்ருகளை வணங்கக்கூடிய இடமாக எடுத்துக்கொண்டார்கள் (புகாரி ) இந்த ஹதீஸில் மரணித்தவர்களின் கப்ருகளை அல்லாஹ்வை சுஜூத் செய்யும் தளமாக ஆக்கிக்கொள்ள வேண்டாம் என்று தெளிவாகவே குறிப்பிடுகிறார்கள்.இங்கே கப்ருகளில் உள்ளவர்களை யாரும் வணங்கவில்லை என்ற விடயம் எடுத்துக்காட்டப்படும் அதே நேரம் அப்படி ஒரு முஸ்லிம் படைத்த ரப்பை வைத்துக்கொண்டு கப்ருகளில் இருப்பவர்களுக்கு சுஜூத் செய்வார்களா ? என்பதை எந்தவொரு மனச்சாட்சியுள்ள முஸ்லிமாலும் சொல்லிக்காட்ட முடியாத விடயமாகும்.அப்படி யாராவது சொன்னால் அது சிர்க்கான விடயம் என்பதற்கு மாற்றுக்கருத்து கிடையாது. கப்ரின் மீது தொழுவது அன்றும் கூடாத விடயம் ,இன்றும் கூடாத விடயம் ,இனி என்றுமே கூடாத விடயம் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து கிடையாது.ஆனால் “கப்ருகளுக்கு அருகாமையில் இருக்கும் கட்டிடத்தை அல்லாஹ்வை வணங்கும் இடமாக எடுத்துக் கொள்கிறார்கள்” என்ற விடயமும், “கப்ரை வணங்கக்கூடிய இடமாக எடுத்துக்கொள்கிறார்கள்” என்ற விடயமும் இரு வேறுபட்ட எதிரும் புதிருமான விடயங்களாகும். என்பதை சகோதரர்கள் தெட்டத்தெளிவாக புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன் .எனவே கப்ரை முன் நோக்கியோ அதன் மீதோ தொழுவதை வெறுக்கும் இஸ்லாம் கப்ருக்கு அருகாமையில் பிரத்தியேகமாக அமைந்துள்ள இடத்தில் கிப்லாவை முன்நோக்கி தொழுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பள்ளிவாசலில் அல்லது பிரத்தியேக இடத்தில் தொழுவதற்கு தடை விதிக்கவில்லை என்பதை புரிந்து கொள்ளவேண்டும். அவ்லியாக்கள் மூலம் தான் அங்கே பள்ளிவாசல் வர காரணமாக இருந்ததேயல்லாமல் பள்ளிவாசல் கட்டப்பட்டதன் பின்னால் அவ்லியாக்கள் வந்து மரணித்து அங்கே கப்ருகளில் அடங்கப்படவில்லை.அவர்கள் அடங்கப்பட்டுள்ள இடம் அவர்களுக்கு அவ்வூர் வாசிகளால் நன்கொடையாக வழங்கப்பட்ட காணி அல்லது அவர்கள் தமது சொந்த பணத்தினால் வாங்கிய பூமியாகும் .எனவே அவர்களின்

அடக்கம் பற்றியோ , அடங்கப்பட்டவர்கள் பற்றியோ விமர்சிப்பதற்கு யாருக்கும் அருகதை கிடையாது.இவ்வாறு விமர்சிக்கும் நிறைய கூட்டத்தினர் அவ்லியாக்கள் மூலம் உருவாக்கப்பட்ட பள்ளிவாசல்களை கைப்பற்றிக்கொண்டு தங்களின் வழிகெட்ட இயக்க கொள்கைகளை முன்னெடுத்து வருவது எவ்வளவு மானக்கேடானது என்பதை சம்பந்தப்பட்ட இயக்க வாதிகள் சிந்தித்து பார்ப்பது முக்கியமானதாகும்.

இன்று சில இளைஞர்கள் சியாரம் உள்ள பள்ளிவாசல்களில் தொழுவதற்கு தயக்கம் காட்டுகிறார்கள் அன்பர்களே மஸ் ஜிதுன்நபவியும் ரசூலுல்லாஹ்வின் ரவ்லாஷரீபும் ஒரு சுவர் இடைவெளியிலேயே அமையப்பெற்றுள்ளதுடன் அவர்களை தொடர்ந்து அபூபக்கர் (ரலி)அவர்களின் கப்ரும் அருகருகே இருக்கிறதல்லவா? இதற்காக சஹாபாக்கள் மஸ்ஜிதுன் நபவிக்கு தொழப்போகவில்லையா ?அப்படி வருபவர்களை ஆயிஷா நாயகி இருக்கும் போதே தடுத்திருக்க வேண்டுமல்லவா ? ஏன் கப்ருகள் உள்ள பள்ளிவாசளில் தொழுவதற்கு ஆயிஷா நாயகி அனுமதிக்க வேண்டும் ?அது மட்டுமல்ல மஸ்ஜிதுல் அக்ஸாவை சூழவும் ஆயிரக்கணக்கான நபிமார்கள்,சஹாபாக்கள்,சுஹதாக்கல் நல்லடியார்களின் கப்ருகள் எல்லாம் அமையப்பெற்றுள்ளது.அப்படியாயின் அந்த பள்ளியில் தொழமுடியாதா என்ன ?அந்த பள்ளிவாசளைப்பற்றி திருமறையில் அல்லாஹ் குறிப்பிடும் போது "பறக்கத் சூழப்பட்டதும் அல்லாஹ்வின் அத்தாட்சிகள் இருக்கும் பள்ளிவாசளாகவும் குறிப்பிட்டு சொல்லுகிறான் இங்கே இப்படி கூறுவதற்கான காரணமே அந்த பள்ளிவாசலை சுற்றியும் அடங்கப்பெற்றுள்ள நபிமார்களினதும்,நல்லடியார்களினதும் கப்ரு ஷரீபாகும் என்பதில் மாற்று கருத்து கிடையாது. என்பதுடன் பள்ளிவாசளில் தொழுவதற்கும் நல்லடியார்கள் அதன் பக்கத்தில் அடங்கப்படுவதட்கும் எவ்வித ஆட்சேபனையும் கிடையாது என்பதை தெளிவு படுத்தி காட்டுகிறது.

**3.பெண்கள் சியாரத் செய்வதை நபியவர்கள் சாபமிட்டார்களா ?பெண்களுக்கு தர்காவுக்கு செல்ல முடியாதா ?**

பெண்கள் தர்காவுக்கு செல்வதை தடுப்பதற்காகவும் வஹ்ஹாபிகள் “ பெண்கள் ஜியாரத்து செய்ய மையவாடிக்கு செல்வது கூடாது” என்ற ஹதீஸை குறிப்பிடுகிறார்கள்.உண்மையில் அந்த ஹதீஸ் எந்த காலத்தில் சொல்லப்பட்டது என்பதை அறிந்து பேசுவார்களானால் அப்படி சொல்லமாட்டார்கள்.ஜாஹிலிய்யா காலத்தில் பெண்கள் கப்ருகளுக்கு சென்று கதறி அழுது ஒப்பாரி வைக்கும் அளவுக்கு பெண்கள் நடந்து கொண்டமயினாலும் ,பொது மையவாடியில் பெண்கள் மஹ்ரமின்ரி செல்வதனாலும் நபியவர்கள் அதை வெறுத்தார்கள் ஆனாலும் பிற்காலத்தில் இந்த சட்டம் நபியவர்களாலே மாற்றப்பட்டது.ஆகவே பெண்கள் மையவாடிக்கு செல்லலாம் என்ற அனுமதியை ஆயிஷா நாயகி பிற்பட்ட காலங்களில் தெளிவுபடுத்தினார்கள்.அது மட்டுமல்ல ஆயிஷா நாயகி அவர்கள் உமர் (ரலி )அவர்கள் அடக்கம் செய்யப்பட முன்பு சாதாரண ஆடையுடன் வீட்டில் எப்படி குடும்பத்தினர் இருக்கும்போது ஆடை அணிவார்களோ அப்படி அணிந்து கொண்டே சியாரத் செய்ய செல்பவராக காணப்பட்டார்கள்.ஆனால் எப்போது உமர் (ரலி )அவர்களை அங்கே அடக்கம் செய்தார்களோ அப்போதில் இருந்து ஆடைகளை சம்பூரணமாகவும் ,பூரணத்துவம் மிக்கதாகவும் ஒரு அஜ்னபிக்கு முன்னாள் எப்படி ஆடை அணிந்து செல்வாரோ அப்படியே ஆடை அணிந்து செல்பவராக காணப்பட்டார்.இதற்கு காரணம் வினவவே இது வரை காலமும் எனது தகப்பனாரும் ,கணவருமே இங்கே அடங்கப்பட்டிருந்தார் அதனால் தான் சாதாரண உடையுடன் ஜியாரத் செய்ய செல்பவராக இருந்தேன் ஆனால் இப்போது உமர் (ரலி)அவர்கள் இங்கே அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் . அவர் எனக்கு அஜ்னபியானவர் அதனால் தான் நான் முன்புபோல் வருவதற்கு வெட்கப்படுகிறேன். ஆடைகளை ஒழுங்கமைத்துக்கொண்டு வருவதற்கான காரணமும் இதுவே என்று விளக்கமளித்தார்கள் (அஹ்மத் )

எனவே பலயீனமான பெண்களுக்கு துக்கத்தை தாங்கிக்கொள்ளும் சக்தி இல்லாமல் இருந்த காலத்தில் வந்த சட்டம் பெண்களுக்கான சரியான கட்டுக்கோப்புக்களை இஸ்லாம் வகுத்து கொடுத்ததன் பின்னால், பெண்கள் அதற்குரிய ஒழுங்குகளுடன் கப்ரடிக்கு சென்று வஸீலா மூலம் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதையோ பிரார்த்தனைகள் புரிவதையோ இஸ்லாம் தடுக்கவில்லை .அப்படி பெண்கள் கப்ரடிக்கு செல்வது கூடாது என்றிருந்தால் ஆயிஷா நாயகி அவர்கள் தனது கணவராகிய நபியவர்களையும்,தந்தையாகிய அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களையும் ,உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களையும் ஜியாரத் செய்ய சென்றிருப்பார்களா ?என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்.பெண்கள் ஜியாரத் செய்வதை சபித்தார்கள் என்ற ஹதீஸ்” பெண்கள் ஜியாரத் செய்ய கூடாது” என்று நபியவர்களால் தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் சொல்லப்பட்டதாகும் அதன் பின் அதன் சட்டம் மாற்றப்பட்டதாகும் என்ற விளக்கத்தை அந்த ஹதீஸை பதிவு செய்த இமாம் திர்மிதி (றஹ் ) அவர்கள் தனது ஹதீஸ் பதிவுக்கு கீழால் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே கவனத்தில் எடுப்பதால் வஹ்ஹாபிகளின் குற்றச்சாட்டு இங்கே சுக்கு நூராக்கப்படுகிறது.

**4.கப்ருக்குள் இருக்கும் நபிமார்கள் ,சஹாபாக்கள் ,வலிமார்கள் ,நல்லடியார்கள் மண்ணோடு மண்ணாக போய்விட்டார்களா ?**

"அன்பியாக்களுடைய உடல்களை உண்பதை இறைவன் நிச்சயமாக பூமிக்கு ஹறாமாக்கிவிட்டான் "என்று நபி (ஸல்)அவர்கள்

திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள் (அபூதாவூத் ,இப்னு மாஜா ,பைஹகி )முதலிய சஹீஹான கிரந்தங்களில் இந்த ஹதீஸ் பதிவாகியுள்ளது .ஆகவே அவர்கள் ஜீவியத்தில் எப்படி இருந்தார்களோ அப்படியே உலகை விட்டு மறைந்த பின்பும் கப்ரில் இம்மைக்கும் ,மறுமைக்கும் மத்தியில் ஆழமுள் பர்ஸகில் உலக முடிவு நாள் வரை ஹயாத்தாகவே இருப்பார்கள்.

அல்லாஹ்வுடைய பாதையில் வெட்டப்பட்டவர்களை மவுத்தானவர்களென்று சொல்லாதீர்கள்.அவர்கள் ஹயாத்தையுடையவர்கள் ஆனால் அறிய மாட்டீர்கள் .(2:154) என்றும் ஆண்டவனுடைய பாதையில் வெட்டப்பட்டவர்களை மரணித்தவர்கள் என்று நினைக்கவும் வேண்டாம் .ஆனால் அவர்கள் ஜீவனுள்ளவர்கள் ஆண்டவன் பக்கமிருந்து ரிஸ்க் கொடுக்கப்படுகிறார்கள் ,ஆனந்தமாக இருக்கிறார்கள்.(3:169-170)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்)அவர்கள் கூறினார்கள் நான் மக்காவிலிருந்து பைத்துல் முகத்தஸிற்கு அழைத்துச்செல்லப்பட்ட இரவில் செம்மணற்குன்றின் அருகில் மூஸா (அலை)அவர்களிடம் சென்றேன்.அப்போது தமது அடக்கஸ்தலத்தினுள் நின்று தொழுதுகொண்டிருந்தார்கள்.(முஸ்லிம் 4736,4737)

ஆகவே அன்பின் சகோதரர்களே ஒருவர் மரணித்தால் மரணித்தது தான் அவருக்கும் இவ்வுலகத்திட்கும் சம்பந்தமில்லை அவர் மண்ணோடு மண்ணாக போய்விட்டார்கள் என்ற வஹ்ஹாபிகளின் குற்றச்சாட்டுக்களை மேலுள்ள ஆதாரங்கள் தகர்தெறித்து விட்டது என்பதை விளங்கிகொள்ளலாம்.அத்துடன் "குல்லு நப்ஸின் தாஇகதுல் மௌத் "என்ற வசனம் சொல்லும் அனைத்து ஆத்மாக்களும் மரணத்தை சுவைத்தே தீரும் என்ற கருத்து இந்த உலக வாழ்வை உடையவர்கள் அனைவருக்கும் மரணம் உண்டு என்று சொல்லுவதே ஒழிய மரணித்த நல்லடியார்கள் கப்ருக்குள் வாழும் வாழ்வு குறித்து சொல்லப்படும் அத்தியாயம் அல்லவென்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

முஸ்லிம்களின் கப்ருகளை கண்டால் ஸலாம் சொல்லவும் பிரார்த்தனை புரியவும் சொன்ன இஸ்லாம் வஹ்ஹாபிகளின் பார்வையில் மண்ணோடு மண்ணாகி போன சடலத்துக்குத்தான் ஸலாம் உரைக்க சொல்லியிருக்குமா ?என்பதை சிந்திப்பவர்களுக்கு புரிந்துகொள்ளலாம் அல்லவா?சலாம் உரைத்தால் பதில் சொல்வது கடமையல்லவா ?அப்படியானால் ஷரீ அத் சட்டங்கள் மரணத்துக்கு அப்பால் செல்லுபடியற்றதாகி விடுமா ?என்பதை வஹ்ஹாபிகளிடம் கேட்கிறோம்.ஷரீ அத் சட்டங்கள் மரணத்துக்கு பின்னாலும் செல்லுபடியாகும் அப்படியானால் நாம் சலாம் சொன்னால் அதை கப்ருக்குள் இருப்பவர்கள் கேட்க வேண்டும் அதற்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டும் .அவர்களுக்கு எதுவும் கேட்காது என்றால் எப்படி எமது ஸலாத்துக்கு பதில் சொல்லுவார்கள் ?பதில் சொல்லத்தேவையில்லாத ஸலாத்தை தான் நபியவர்கள் கப்ரில் இருப்பவர்களுக்கு சொல்லுமாறு எமக்கு கற்று தந்தார்களா ?ஸலாத்துக்கு பதில் சொல்வது வாஜிப் என்றால் அந்த சட்டம் மரணித்தவர்களுக்கு எப்படி செல்லுபடியாகாமல் இருக்க முடியும்?என்பதை சிந்தித்து பேசினால் இப்படியான குளறுபடிகள் வரமாட்டாது என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

**5.மரணித்தவர்களை கேட்க செய்ய முடியும் என்று நாம் சொல்கிறோமா? மண்ணறையில் இருப்பவர்களுக்கு நாம் பேசுவது கேட்பதில்லையா?**

* இறந்தவரை மண்ணறைக்குள் வைத்து அடக்கம் செய்துவிட்டு மக்கள் திரும்பி செல்லும்போது அவர்களின் காலணி ஓசையை இறந்தவர் செவியேற்பார் என்று நபி (ஸல்)அவர்கள் கூறியுள்ளார்கள்.சஹீஹ் முஸ்லிம் 5505,5506)

* பத்ர் யுத்தத்தின் பின்னால் நபியவர்கள் வெட்டப்பட்ட காபிர்களின் சடலங்கள் போடப்பட்ட இடங்களை பார்த்து "எனது றப்பு வாக்களித்தவற்றை நாம் பெற்றுக்கொண்டோம் நீங்களும் உங்களுக்கு வாக்களித்தவற்றை பெற்றுக்கொண்டீர்களா ?என்று பேசிக்கொண்டிருந்த போது அருகில் இருந்த உமர் (ரழி )அவர்கள் யாரசூலல்லாஹ் அவர்கள் வாளினால் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டவர்கலாச்சே நீங்கள் பேசுவதை அவர்களால் எப்படி கேட்க முடியும் என்று கேட்கவே நபியவர்கள் உமரே நான் பேசுவதை அருகில் இருக்கும் நீங்கள் எப்படி தெளிவாக கேட்கிறீர்களோ அதை விடவும் தெளிவாக அவர்கள் கேட்கிறார்கள் "என்று நபியவர்கள் கூறிய ஹதீஸ் புகாரி போன்ற சஹீஹான கிரந்தங்களில் பதிவாகியுள்ளது .இவ்வளவு தெளிவாக **மண்ணறையில்** இருப்பவர்கள் செவியேற்பார்கள் என்று ஹதீஸ்களில் வந்துள்ள போதும் உண்மையை மறைப்பதற்காக பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை சொல்லி மக்களை குழப்புகிறார்கள் ."நபியே மண்ணறையில் இருப்பவர்களை செவியேற்கசெய்ய உம்மால் முடியாது "(35:22) ,நீர் மரித்தோரை கேட்கும்படி செய்ய முடியாது (27:80)

இந்த ஆயத்துக்கள் தெளிவாகவே நபியவர்களுக்கோ ,ஏனைய மனிதர்களுக்கோ கப்ரில் இருப்பவர்களை கேட்க செய்ய முடியாது என்று கூறி இருக்க இதற்கான தப்பான விளக்கத்தை வழங்கி மக்களை வழிகெடுத்தி வருகிறார்கள்.உண்மையில் அல்லாஹ்வின் படைப்புக்கள் யாவற்றாலும் ,யாராலும் அல்லாஹ்வின் உதவி இன்றி அவனது நாட்டம் இன்றி இன்னொருவருக்கு உதவி செய்யவோ மரணித்த மனிதர்களை கேட்க செய்யவோ முடியாது அதை அல்லாஹ்வே யதார்த்தத்தில் கேட்க செய்கிறான் அவனுக்கே சர்வ வல்லமையும் உண்டு. என்ற தத்துவமே இங்கு எடுத்து காட்டப்படுகிறது நாம் மரணித்தவர்களை கேட்க செய்கிறோம் என்று சொல்லவில்லையே ?நாம் சொல்லாத ஒரு விடயத்தை சொல்வதாக வைத்து எதற்கோ வந்த குரான் ஆயத்தை

வேறு எதற்கோ குறிப்பிட்டு முஸ்லிம்களை நரக வழியில் தள்ளும் வஹ்ஹாபிகளின் திட்டமிட்ட மோசடியில் இருந்து அல்லாஹ் நம்மனைவரையும் காப்பற்றுவானாக.

6. **ஒப்பீடு செய்யும் சில உலக நடைமுறைகள் வேறு மதங்களிலும் ஒன்று பட்டால் அந்த உலக நடைமுறைகளை செய்வபவர்கள் அந்த மதத்தை சார்ந்து விடுவார்களா ?**

வஹ்ஹாபிகள் தமது போலியான கொள்கையின் பலவீனங்களையும் ,பொய்யான பிரச்சாரங்களையும் மறைத்து மக்களை தமது வழிகேட்டு கொள்கையின் பால் தக்க வைத்து கொள்வதற்காக தர்காவில் இஸ்லாமியர்கள் செய்யும் சில செயல்பாடுகளான ஜியாரத்துக்கு பிடவை போடுதல் ,எண்ணெய் தர்மம் செய்தல் ,ஜியாரத்தின் பால் பூக்கள் தூவுதல்,சந்தனம் பூசுதல்,சாம்பிராணி,சந்தனக்கூறு புகைத்தல்,சமாதிகளை மின்விளக்குகளால் அலங்கரித்தல்,காணிக்கைகளை கட்டுதல்,கொடி ஏற்றல் போன்ற செயல்பாடுகளை மாற்று மத கடவுள் வழிபாட்டு முறைகளுடன் ஒப்பிட்டு இந்த செயல்பாடுகளும் மாற்றுமத செயல்பாடுகள் தான் என்று இந்த “தர்கா வழிமுறைகளும்” சிர்கை உண்டாக்கி விடும் என்று மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்துவருவதை காணலாம்.இதன் ஒரு அங்கமே சில காலங்களுக்கு முன் வஹ்ஹாபிகளால் வெளியிட்ட "பார்வாதி அம்மாவும் ,பாத்தும்மாவும் என்ற துண்டுபிரசுரமாகும் இதில்முஸ்லிம்கள் தர்காவில் செய்யும் சில விடயங்களை மாற்று மத சகோதரர்கள் தமது கடவுள் வழிபாட்டு செயல்பாடுகளுடன் ஒப்பிட்டு அந்த ஒப்பீடுகளில் இரண்டிலும் பொருந்தும் விடயங்களை வைத்து அந்த ஒட்டுமொத்த ஜியரம் சார்ந்த வழிமுறைகளையுமே சிர்க் பட்டம் சூடும் இவர்கள் ,பின்வரும் விடயங்களில் இரண்டு மதத்திலும் ஒன்றும் படும் செயல்பாடுகளும் ஒன்று படுவதால் அந்த இஸ்லாமிய வழிமுறைகளும் மாற்று மத வழிமுறைகளாகுமா? என்பதை கேட்க விரும்புகிறோம்.ஹஜ்ஜிலும் ஹாஜிகள் மொட்டை அடிக்கிறார்கள் ,திருப்பதியிலும் ஹிந்து பக்தர்கள் மொட்டை அடிக்கிறார்கள் இரண்டு செயல்பாடுகளும் ஒன்றாகி விடுமா ?முஸ்லிம்களும் அல்லாஹ்வின் பெயரில் மிருகப்பலி செய்கிறார்கள் ,ஏனைய மதத்தினரும் தத்தம் கடவுள் பெயரால் மிருகப்பலி செய்கிறார்கள் .இரண்டும் ஒன்றாகிவிடுமா? அழங்காரத்துக்காகவும்,நறுமணத்துக்காகவும்,அன்பை வெளிப்படுத்துவதட்காகவும் இரண்டு மதத்தினர் ஒரு பொருளை பயன்படுத்துவார்களானால் அவர்களும் அந்த மதத்தை சார்ந்தவர்கள் என்று கூறமுடியுமா ?

மேற்கூறப்பட்ட அனைத்து அம்சங்களுமே இஸ்லாமிய அடிப்படையிலோ ,அகீதாவிலோ எவ்வித மாற்றத்தை ஏற்படுத்தவில்லை நல்லடியார்களுக்கு இறங்கும் நல்லருளில் இருந்து பறக்கத் பெற்றுக்கொள்வதற்கும் ,நல்லடியார்களின் மீது உள்ள அன்பை வெளிப்படுத்தும் விதமாக அன்னாரின் கப்ரு சரீபின் மீது பூக்களை தூவி,அவர்களின் கப்ரின் மீது பிடவைகளை போட்டு அலங்கரித்து அவர்களுக்கு அல்குரானின் சில பகுதிகளை ஓதி நன்மைகளை அன்னாரின் மீது ஹதியா செய்வதன் மூலம் நல்லடியார்களை சந்தோசப்படுத்தி அதன் மூலம் நாம் அவர்களின் பொருட்டை கொண்டு எமது நோய் பிணிகள் ,தேவைகளை முன்வைத்து நற்பாக்கியங்களை அடைந்துகொள்ளவுமே மேற்படி காரண காரியங்களை செய்வதேயல்லாமல், அங்கு விளக்குகளில் ஊற்றப்படும் எண்ணெய் தான் சுகப்படுத்துகின்றதென்றோ ,அல்லாஹ்வின் சக்தியை மறந்ததாக தர்காவில் இருப்பவர்களை மதிக்க வேண்டும் என்று நம்பிக்கை கொள்ளவோ யாரும் சொன்னதுமில்லை.அப்படி யாரும் செய்வதுமில்லை.ஆகவே ஒப்பீடு செய்யும்போது எதை எவற்றோடு ஒப்பிட வேண்டும் ? யாரை யாரோடு ஒப்பிட வேண்டும் என்ற விபரம் தெரியாமல் இந்த வழிகேடர்கள் முறைகேடான ஒப்பீட்டு நோக்கலை மாத்திரம் வைத்து தமது வழிகேட்டு இயக்க பிரச்சாரங்களை முன்னெடுத்து வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே இவ்வளவு நன்மைகளும், நற்பாக்கியங்களை பெற்றுத்தரவல்ல ஜியாரத் சார்ந்த வழிமுறைகளை செய்ய அனைவரும் முன்வருமாறு அழைப்பு விடுக்கும் அதேநேரம் இந்த விடயத்தில் அறியாமல் சில சகோதரர்கள் செய்யும் தவறுகளை நிறுத்தி ,தவறாக நடப்பவர்களுக்கு சரியான அறிவையும் இது தொடர்பான தெளிவுகளையும் வழங்கி ,இங்கு நடக்கும் சில குறைபாடுகளை அனைவரும் சேர்ந்து திருத்தியமைத்து ஒரு ஒழுங்கான அமைப்பில் இந்த அமலை செய்வதற்கு முன்வருமாறு அனைத்து இயக்க சகோதரர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். நபியவர்களே ஜியாரத் விடயங்களில் எவ்வித எச்சரிக்கையும் வழங்காத போது இந்த வழிகேடர்களின் போலி எச்சரிக்கைகளுக்கும்,ஷிர்க்,குற்றச்சாட்டுக்களுக்கும் செவி தாழ்த்தாமல் இவ்வளவு ஆதரம்மிக்க சியாரத் வழிமுறைகளை உரிய இஸ்லாமிய சட்டதிட்டப்படி உயிர்பிக்க செய்யவும் ,சத்திய இஸ்லாமிய வழியாகிய அஹ்ளுஸ்ஸுன்னாஹ் வல் ஜமாஅத் வழியிலே வாழ்ந்து மரணிப்பதற்கும் வல்லவன் அல்லாஹ் தௌபீக் செய்து அருள்புரிவானாக ஆமீன்.

**தொகுப்பு :எம் .ஆர் .லுதுபுல்லாஹ் (ஆசிரியர் அல்முஸ்தபவிய்யாஹ் அஹதியா பாடசாலை) M.R.Luthufullah (Teacher of ALMAS)**

வெளியீடு :அஹ்ளுஸ் ஸு ன்னாஹ் வாலிபர் ஒன்றியம் கஹடோவிட ஊடக அனுசரணை :Assdo muhammed manas kalmunai 03 www.assdo.org

வெளியீட்டு அனுசரணை :Assunnah foundation No.52/41,Perera Mawatha Meethotamulla Colombo.

குறிப்பு (இந்த துண்டுப்பிரசுரத்தில் அல்குரான் மற்றும் ஹதீஸ் வசனங்கள் இருப்பதால் பாதைகளில் வீசிவிடாத வண்ணம் கண்ணியத்தை பேணிக்கொள்ளவும்),

**For Comments and Complaints-0779889821,m.luthufullah@yahoo.com,FB-Mohamed Luthuffullah (Rabiyyul awwal 12/ 23/12/2015-2016).**